கி.ராஜநாராயணனின் படைப்புகளில் பெண்கள்

முனைவர் ஜெ. பொன்மணி
தமிழ்த்துறைத் தலைவர்
நாசரேத் மர்காஷிஸ் கல்லூரி, பிள்ளையன்மனை

முன்னுரை

கி.ரா. கரிசல் மண்ணில் வாழ்ந்த விவசாயத் தொழிலாளர்களும், அவர்களின் குடும்பங்களும் அவர் எழுதிய கதைகளின் நாயகன், நாயகிகளாக விளங்குகிறார்கள். வாழ்க்கையில் தான் கண்டவற்றையும், கேட்டவற்றையும் தனது இலக்கியங்களில் படைத்துள்ளார். விவசாயிகள் போராடியபோது ஒதுங்கி நின்று வேடிக்கைப் பார்க்காமல் அவரும் அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர். விவசாயிகளின் வாழ்க்கையைப் பதிவு செய்ததோடு நின்றுவிடாமல் அவர்களின் சுக துக்கங்களிலும் பங்கேற்றவர். நமது நாட்டுப்புற மக்கள் பேசிய மொழியையும், கையாண்ட பழமொழிகளையும் தனது படைப்புகளில் பதிவு செய்த முதல் எழுத்தாளரும் கூட. எத்தனையோ எழுத்தாளர்கள் தங்களின் படைப்பிலக்கியத்தை உலகிற்கு தந்தாலும் கரிசல் மக்கள் வாழ்வியலைச் சுமந்த அவர்கள் பேசும் வட்டார வழக்குச் சொல்லை அகராதியாக்கி தந்தவர் கி.ரா. தெற்குச் சீமையில், மானாவாரி நிலத்தில் பருத்தி செழித்து வளரும் பருப்பு மண் தான் கரிசல் காடு. வீரம் விளைந்த மண். அம்மண்ணில் வாழ்ந்த மனிதர்களில் முக்கியமாகப் பெண்களை தனது படைப்புகளில் எவ்வாறு ஆவணப்படுத்தியுள்ளார் என்பதை கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கி.ரா.வின் படைப்புகளில் பெண்கள்

கோபல்ல கிராமத்து நாவலின் தொடக்கத்தில் ஒரு பெண் வீட்டில் கோபித்துக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறுகின்றாள். ஒத்தையடிப் பாதையில், தன்னந்தனியாக வரும் போது பதைபதைக்க தண்ணீர் தாகம். வழியில் ஒரு குளத்தைப் பார்க்கின்றாள். குனிந்து இரண்டு கைகளிலும் தண்ணீரை அள்ளிப் பருகுகின்றாள். அப்போது, மறைவில் இருந்து இரண்டு கழுகுக் கண்கள் அவளைப் பார்த்துக்கொண்டு இருக்கின்றன. அதை அவள் கவனிக்கவில்லை. மறைந்து இருந்த கயவன்(கழுகுக் கண்கள்) அவள் காதுகளில் போட்டு இருந்த தோடுகளைப் பறிக்க முயற்சிக்கின்றான். அவள் எதிர்த்துப் போராடுகின்றாள். அவன் அவளை அந்தத் தண்ணீருக்கு உள்ளே போட்டு அமுக்குகின்றான். மூச்சுத் திணறுகின்றது. ஆனால், அவள் அவனுடைய காலின் கட்டை விரலைக் கடித்து விடுகின்றாள்.

இந்த நேரத்தில், தாத்தைய நாயக்கர் வண்டி ஓட்டிக்கொண்டு அந்தக் குளத்திற்கு அருகே வண்டியை நிறுத்திக் கழுவுகின்றார். அப்போது ஒருவன் வேகமாக மூச்சு இரைக்க ஓடி வருகின்றான். 'சுஜயா, இந்தப் பக்கமாக ஒரு பெண் பிள்ளை போனதைப் பார்த்தீர்களா? வீட்டில் கோபித்துக்கொண்டு வந்துவிட்டாள்சுசு என்கிறான். இவருக்கு சந்தேகம். அவர் வந்த வழியில் வேறு யாரும் வரவில்லை. ஆனால், குளத்திற்கு உள்ளே ஒருவன் நிற்கின்றான். ''என்னடா, ரொம்ப நேரமாக அங்கேயே நிற்கிறாய்? வெளியே வாடா'' என்று மிரட்டுகின்றார். அவனால் வர முடியவில்லை. காரணம், அவனது கட்டை விரல் செத்துப்போன அந்தப் பெண்ணின் வாய்க்கு உள்ளே மாட்டிக்கொண்டு இருக்கின்றது.

இவர், வண்டியில் இருந்து ஒரு கம்பியை எடுத்து அவன் மேல் எறிந்து "வெளியே வாடா" என்ற மிரட்டியபிறகு, வேறு வழி இன்றி அவன் காலை இழுக்கின்றான். ஆனால் முடியவில்லை. இவர்களுக்குப் புரிந்து விட்டது. அதன்பிறகு அவனைப் பிடித்து ஒரு கத்தியை எடுத்து, அவன் கட்டை விரலை வெட்டி, அவனை ஊருக்கு உள்ளே இழுத்துக் கொண்டு வந்து, கழுவில் ஏற்றிவிடுகின்றார்கள். அதனால்தான் கழுவன் என்று பெயர் வந்தது. இந்தக் காட்சி யைத்தான், முதல் மரியாதை படத்தில் வைத்து இருக்கின்றார்கள்.

இதில் வரும் அக்கையா கோட்டை வீட்டில் வேலை செய்தாலும், அனைவராலும் மதிக்கப்படுபவர். கோவிந்தப்ப நாயக்கரின் குடும்பத்தை மையமிட்டுத்தான் கதை இயங்குகிறது. இனக்குழுவின் வேறான மங்கத்தாயார் (137 வயது) உயிருடன் வாழும் பெரிய குடும்பம். பூர்வ கதைகளின் கொள்களன் அவள். அவளின் மூத்த பேரன்தான் கோவிந்தப்பா. குடும்பத்தை நிர்வகிப்பவர். கோவிந்தப்ப நாயக்கரின் அத்தை தொலைதூர ஊரில் வாக்கப்பட்டிருப்பவர். திருமணமான இடமும் பெரிய குடும்பம் அவள் நல்ல அழகியும்கூட. தன் அழகின்மீது அவளுக்கு ஒரு கர்வமும் உண்டு. அழகின் கொடுப்பினையால் அனைவராலும் மதிக்கப்பட்டவள். அவளுக்கு விதைக் கம்பம்புல் கொண்டு கொடுத்துவிட்டு வரும்படி அக்கையாவை அனுப்புகின்றனர். நடக்கவேண்டிய தூரமோ ஒரு நாழிகைப் பொழுது தூரம் அக்கையா தலைச்சு மையோடு பொழுதுசாயும் நேரத்தில் அவள் வீட்டிற்குள் நுழைகிறார். அந்தத் துண்டபண்டு வெங்கட்டம்மாள் (கோவைப்பழம் போன்ற சி வந்த நிறமுள்ள வெங்கட்டம்மாள்) இவரைப் பார்த்தும் வாவென்று அழைக்கவில்லை. பேசவில்லை. கண்டுகொள்ளாமல் பேசாமல் இருக்கிறாள். அவளுடைய செய்கையை அக்கையா தலைச்சுமையோடு தன் கண்களால் அளக்கிறார். தற்செயலாக வந்த அவளுடைய கணவன் வரவேற்று சுமையை இறக்குகிறார். ஏதும் நடக்காதது மாதிரி இருந்துகொள்கிறார் அக்கையா.

ஊர் திரும்பியதும் கோட்டையார் குடும்பத்தினர் வெங்கட்டம்மாளைப் பற்றியும் அவளுடைய குடும்பத்தாரைப் பற்றியும் விசாரிக்கின்றனா. அக்கையா முகத்தைப் பாவமாக வைத்துக் கொண்டு "வெங்கட்டம்மாவின் இரண்டு கண்ணலேயும் குந்தம் தள்ளி... பார்வையோ தெரியாமலாவிட்டது. ரொம்....ப பயங்கரமா இருக்கு" என்ற சொல்லி பட்டென்று தரையில் உட்கார்ந்து தரையில் கையை வைத்துக்கொள்கிறார்.

இதைக் கேட்ட மங்கத்தாயாரு "அந்த ராஜதிரேகத்திற்கா இப்படியொரு சோதனை" என எல்லோரையும் பார்த்துவர அனுப்புகிறாள். உடனடியாகப் போய் பார்த்துவிட்டு வந்தவர்கள் எக்கையாவைப் பார்த்தும் மனம் விட்டு சிரிக்கத்தான் முடிகிறது. மங்கத்தயாரு கூட "அவளுக்கு அந்த வார்த்தை வேண்டியது தான். சரி போ" என்கிறாள்.

அக்கையா, அவ்வைபோல ஒரு தாக்குதலைத் தான் தருகிறார். தன்னை மதிக்காது நடந்துகொள்ளும் அதியனைத் தூக்கி எறிநதுவிட்டு "எத்திசை செல்லிலும் அத்திசை சோறே" (புற.206) என்பது போலத் தான் கோட்டை வீட்டிலும் தன் தன்மானத்தைத் துணிந்து வெளிப்படுத்திக்கெளகிறார்.

வெங்கட்டம்மா செய்கைக்குத் தரும் மூர்க்கமான எதிர்ப்பு கோட்டையார் குடும்பத்தவர்கள் நேசமிக்கவர்களாக இருக்கின்றனா. எங்கச்சி என்ற நளபாகக் கெட்டிக்காரி இங்கு வீட்டிற்கு வரும் போதெல்லாம் மகிழ்ந்து வரவேற்கின்றனர். "நல்லதிற்கும் பொல்லாததிற்கும் கோட்டையார் குடும்பத்திற்கு ஆக்கிவைக்க வருபவள். எங்கச்சியின் கை பக்குலம் யாவராலும் மெச்சப்படுகிறது. அந்த வீட்டிற்குச் சும்மா வரும்போதும் அந்தப் பெண்கள் அவ்வளவு மதித்துப் போற்றுகின்றனர். அவளை உண்ணச் சொல்லி பிரியத்தை

வெளிப்படுத்துகின்றனர். அப்படி உண்ணும் போது குழம்பிலோ, ரசத்திலோ உணவுப் பண்டத்திலோ சுவை குறைந்திருப்பதைக் கண்டு ருசிக்கவில்லையோ (இரவில் உப்புக்கு ருசிகல்) கறிவேப்பிலையோ, அதற்குரிய ஒன்றை மிகச்சிறிதளவு எடுத்துப் போடுவாள். அதுவரை இல்லாத சுவை வந்துவிடும். அவளுக்கு அப்படியொரு மரியாதை அந்த வீட்டில். குறிஞ்சி, மல்லை நிலத்தல் இயற்கை சார்ந்த உணவுப் பொருள்கள் அதிகமாகப் பேசப்படுகின்றன. மருதநிலத்தில் சமைத்த உணவு வகைகள் சங்க காலத்திலிருந்த விருந்தோம்பலை பார்க்க முடிகிறது. இந்த நாவலில் கூட "விருந்தாளிகள் வந்தால் குறைந்தது ஒரு மாசம் வரை தங்கிவிட்டுப் போவார்கள்" என்றெல்லாம் வழக்கம் சுட்டிக் காட்டப்படுகிறது. கஞ்சிக்கலயத்தில் சோற்று உருண்டைகளையும் பானையின் கழுத்தோரங்களில் துவையல் வெஞ்சனமுமாக உழவுக் காட்டிற்குக் கொண்டு செல்கிறார்கள். "சமையல்" உணவு என்பது மருதநிலத்தில் அதிகம் மருதநிலத்திற்கே உரிய மரக் கூட்டங்களில், ஒன்று பனைமரங்கள் அதன் பயன்பாடுகள் சொல்லப்படுகின்றன. கம்பு, சோளம், வரகு போன்ற தினை வகைகளின் விளை நிலங்கள் இந்த கரிசல்காடுகள் தான். முக்கியமாகப் பருத்தி உற்பத்தியை பற்றி இந்த நாவல் பேசுகிறது. அது கரிசல் நிலத்திற்கே அதாவது மருதநிலத்திற்கே உரியதாக இருக்கிறது.

அவன் சாகும் தருவாயில் இருக்கும் போது காவல் இருந்த சித்தையா அவன்படும் அவதியைக் கண்டு "எப்பா நீ யாரையாவது கடைசியாகப் பார்க்கணு மிண்ணு ஆசைப்படுகிறாயா? சொல்லு சீக்கிரம். ஏதாவது செய்றோம்" என அன்புடன் கேட்கிறான். அது அவனை நெகிழச் செய்கிறது. கண்களிலிருந்து கண்ணீரை மட்டுமே பதிலாகத் தருகிறான்.

வேப்பமுத்து பொறுக்க வந்த பெண் குழந்தைகள் பயந்து ஒதுங்கி நிற்கின்றன. அக்குழந்தைகளிடம் "என் மக்களே வலி பொறுக்க முடியவில்லை. என்னைச் சுத்தி வந்து கும்மியடிச்சி சாமிமேலே ஒரு பாட்டுப் பாடும்" என்று இரக்கத்தோடு மன்றாடுகிறான். அக்குழந்தைகள் துணியே வரவழைத்துக் கொண்டு கழுமரத்தைச் சுற்றி மாரியம்மன் கும்மிப்பாட்டைக் கும்மியடித்துப் பாடுகின்றனர். தொல்குடி சமூகத்தில் வரும் குழு நடனங்கள் போல களங்கமற்ற குழந்தையின் கும்மி நடனம் நிகழ்கிறது. ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை, வேட்டுவவரி என வரும் ஆட்டங்கள் போல சாவின் சந்நிதியில் ஒருவனின் விருப்பத்தை நிறைவேற்றும் விதமாக வருகிறது. நாட்டார் சிறு தெய்வ வழிபாட்டிலும் சாமக் கொடையின் போது பேச்சியம்மன் சாமியாடிகள் கும்மி அடிக்கும் வழக்கம் கரிசல் பகுதியில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

கழுவில் மரணமடைந்த அவனுக்கும் ஒரு நடுகல் எழுப்புகின்றனர். அவனால் கொலையுண்ட கர்ப்பிணிப் பெண்ணிற்கு நடுகல்லும், சுமைதாங்கிக் கல்லும் சமைக்கின்றனர். இந்தக் கழுவேற்றல் தண்டனையால் ஊருக்கு எந்தவிதமான பாதிப்பும் வரக்கூடாது என்று தெய்வமாக வழிபடுகின்றனர். எந்தக் காரணமும் இல்லாமல் கொலையுண்ட ஆசாரிப் பெண்ணும் இவர்களுக்குத் தெய்வமாகின்றாள். இப்படியான சங்கமரபின் மறுதலையான ஒரு தொடர்ச்சியையும் கி.ரா. காட்டுகிறார். கழு ஏற்றுவது சமண கால கட்டத்திலிருந்து இன்றும் தொடர்வதை பார்க்க முடிகிறது.

பிரசவிக்காமல் இறந்த கர்ப்பிணிப் பெண்களின் வயிற்றைக் கிழித்து சிசுவை எடுத்துத் தனித்தனியாகப் புதைக்கவேண்டிய வழக்கத்தை ஊர் சொன்ன போது அப்பெண்ணின் கணவன் மறுக்கிறான். அலங்கோலம் செய்யாமல் புதைக்க வேண்டுகிறான். அவளின் பாம்படத்தை ஏழைப்பெண்ணிற்குத் தந்துவிடும்படி கூட்டத்தின் முன் வைத்து விட்டுச் செல்கிறான். இறந்த பெண்ணின் வயிற்றில் உள்ள குழந்தையை

கிழித்தெடுக்க வேண்டும் என்ற வழக்கம் "குழவி இறப்பினும் ஊண்தடி பிறப்பினும் வாளின்று அறுப்பர்" என்ற வழக்கத்தினோடு தொடர்புடையதுபோல் இருக்கிறது. நாட்டார் வழிபாட்டில் இவர்கள் சில இடங்களில் வணங்கப்படுவதில்லை. சில இடங்களில் வணங்கப்படுகிறார்கள். இவர்களுக்கு இரு கற்களை நாட்டி அதற்கு மேல் ஒரு கல்லை வைப்பர். சுமை தாங்கி கல் என்றும் கூறுவதுண்டு.

"தொண்டு" என்ற கதையில், ஒரு பெண் தன்னையே தியாகம் செய்கின்றாள். பணத்திற்காக அல்ல, அந்த ஊருக்கு உதவுகின்றாள். பலருடைய மகிழ்ச்சிக்கு அவள் பயன்படுகின்றாள். இந்த நேரத்தில் அந்த ஊரில் பெரிய போக்கிரியை, யாரோ கொலை செய்து விடுகின்றார்கள். பட்டாளம் வருகின்றது. அந்தக் காலத்தில் அந்தப் பெயரைக் கேட்டாலே எல்லோரும் அஞ்சி நடுங்குவார்கள். பிரித்து விடுவானே. என்ன செய்வது? எல்லோரும் கூடிப் பேசுகின்றார்கள். அப்போதும், அந்தப் பெண் காமம்மாளின் உதவியைத்தான் நாடுகின்றார்கள். அவள் மேலும் தியாகம் செய்கின்றாள்.

கோமதி என்ற கதையில் திருநங்கை பற்றி எழுதப்பட்ட முதல் கதை. ஆணாகப் பிறந்து பெண்ணாக தன்னை உருவகித்து வாழ்ந்த திருநங்கையின் உடல், மன ரீதியான பாதிப்புகளை எடுத்து கூறியுள்ளார். இவ்வாறு பெண்களின் மீது சாதி, இனம், பாலினம் அடிப்படையில் சுமத்தப்பட்ட கொடுமைகள் தமது படைப்புகளின் மூலம் ஆவணப்படுத்தியுள்ளார். கி.ரா.வின் கதையில் வரும் பெண்கள் வலிமை, போராட்ட குணம், உழைப்பாளிகளாகவும், குடும்பத்தை சுமக்கும் பெண்களாகவும் வருகின்றனர்.

"பேதை" என்றகதையில்பருத்திக்காட்டில் வேலை செய்யவந்த பெண் இயற்கையோடு இணைந்து வாழ்வு நடத்துபவள். அவளை யார் கற்பழித்தார்கள் என்றே அவளுக்கே தெரியாது. குழந்தை பிறந்து இறந்த பின்பும் அவள் குழந்தையைவிடத் தயாராக இல்லை. அவள் வலுக்கட்டாயமாக அக்குழந்தையிடமிருந்து பிரிக்கப்படுகிறாள். தனக்கு என்ன நடந்தது என்று அவளுக்குத் தெரியாமலேயே இருக்கிறாள். அவள் மறுபடியும் கருவுறுகிறாள். அவள் கதை ஆரம்பத்திலும் பேதைதான். கதை முடிவிலும் பேதைதான். எனென்றால் அவளால் அவளுடைய மண் வாசனையை மீற முடியாது. அவளின் செய்கையைக் கதையின் முடிவில் கி.ரா. பின்வருமாறு கூறுகிறார். "பிறந்த மேனியாக, மீண்டும் நிறைமாச கர்ப்பிணியாய் வயிற்றைத் தள்ளிக் கொண்டு அந்தக் கோட்டிக்காரி ஸ்தனங்கள் ஆட ஒரு ஆணைப்போல் கைகளை முன்னும் பின்னும் வீசிக்கொண்டு திட், திட் என்று பூமி அதிர அந்தக் கிராமத்தின் நடுத்தெருவே நடந்து சென்று கொண்டிருந்தாள்" (கன்னிமை, பக்.78)

"கன்னிமை நாச்சியார்" என்ற இளம் பெண்ணின் இயல்பைச் சொல்லும் கதையாக ஒரு வாசிப்பில் தோன்றும் கன்னியாக இல்லத்தில் இருக்கையில் தாய்மையின் வடிவாக. கனிந்த அழகுடன் அவள் இருக்கிறாள். கதை முழுக்க அவள் கன்னிமை காத்த அழகு சொல்லப்படுகிறது. இல்லத்திற்கு வரும் ஒவ்வொருவருக்கும் அவர்களுக்குப் பிடித்தமான ஒன்றைச் செய்து உபசரிக்கிறாள். ஒவ்வொருவருக்குமான புன்னகையும் அவளிடம் இருக்கிறது. பிறகு அவள் திருமணம் செய்து கொள்கிறாள். மொத்த அன்புமே அவர்களுடைய குழந்தைகளுக்காக ஒதுக்கப்பட்டு விடுகிறது. பேரன்னையாக இருந்தவள், வெறும் அன்னையாக மாறுகிறாள். ஆகவேதான் கதைக்குக் கன்னிமை என்ற பெயரிட்டிருக்கிறார். இன்றைய பெண் அப்படி அல்ல. மிக இளம் வயதிலேயே போட்டிமிக்க ஒரு வாழ்க்கையில் தள்ளப்படுகிறாள். வஞ்சகங்களையும் சூழ்ச்சி களையும் அறிமுகம் செய்து கொள்கிறாள். தன்னலமாக இரந்தாலொழிய வெற்றி பெற முடியாதென்ற செய்தி அவளுக்குக் குழந்தைமையிலிருந்தே வந்துவிடுகிறது.

இன்று ஒரு நாச்சியார் இருக்க முடியாது. கன்னி அன்னையாகும் மாற்றம் மட்டும் அல்ல, ஒரு பெரிய காலமாற்றமே இந்தக் கதைக்குள் வருகிறது.

"கனிவு" சற்று விசித்திரமான கதை. விசித்திரம் என்று ஏதேனும் இருந்தால்தானே அது கதை? திருமணம் செய்து கொண்டு பெண்ணை வீட்டுக்குக் கூட்டிவந்தவுடன் காளை முன்னால் பசுவைக் கொண்டு நிறுத்துவது போலப் பெண்ணைக் கொண்டு நிறுத்தக்கூடாது என்ற நம்பிக்கை அவ்வூர் பெரியவர்களிடம் இருக்கிறது. ஆகவே ஆணும் பெண்ணும் பழகித் தாங்களாகவே ஒருவரை ஒருவர் கண்டு கொண்டு அந்த முதல் உறவை அவர்கள் நிகழ்த்த வேண்டும் என்று நினைக்கிறார்கள். படிப்படியாக அந்த உறவு நிகழும் விதம் தான் அந்தக் கதையில் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு முறைய கொண்டையா மல்லம்மாவை நோக்கிக் கையை நீட்டுகிறான். அவன் கையெல்லாம் அவன் நகம் கிழித்த வடுக்கள். முறைத்துக் கொண்டிருப்பது பெண்ணின் பெருமையாகவும் முடிந்த வரை கீழிறங்குவது ஆணின் இயல்பாகவும் இருக்கிறது. உயிரினங்கள் அனைத்திலும் இருக்கும் அந்தத் தீராத விளையாட்டு அங்கு நிகழ்கிறது. பின்னர் அவள் நோயுறுகிறாள், ஆணும் பெண்ணும் கொள்ளும் உறவென்பது பாலுறவு மட்டுமல்ல ஒருவரை ஒருவர் சார்ந்து நெருக்கடிகளைச் சந்திப்பது கூடத்தான் என்று புரிந்து கொள்கிறார்கள். அவன் கோயில் சாய்ந்து அவன் அளித்த முதல் உருண்டைச் சோற்றை அவள் பெற்றுக்கொண்டாள் என்று அந்தக் கதை முடிகிறது.

திருமணம் முடிந்து முதல் இரவு காணாத கொண்டையா மல்லம்மா என்ற கிராமத்துத் தம்பதியர் குறித்த கதை. அது ஒரு விவசாயக் குடும்பம், எருமை, பசு, ஆடுகள், நாய், வாத்து, புறா, புள்ளிமான், முயல்கள் இவற்றுடன் ஒரு பூனையையும் கொண்ட பெரிய குடும்பம், அக்குடும்பத்தின் இளந்தாரி கொண்டையாவுக்கு கழுகுமலையில் இருந்து வாக்கப்படுகிறாள் மல்லம்மாள். அவள் தனக்கு வாய்த்த கணவனை முன்பின் பார்த்துப் பழகியதில்லை. குரலைக் கூடக் கேட்டதில்லை. அவள் பிறந்து வளர்ந்த சூழல் வேறு. அவள் தன் தகப்பனைப் பிரிகையில் அதுவரை தன்னோடிருந்த எல்லாம் பிரிவதாக எண்ணி வருந்துகிறாள். புகுந்த வீட்டை அந்நியமாக நினைத்து நாட்களைக் கடத்தும் அவளிடம் முதன் முதலில் சினேகம் காட்டுவது ஒரு பூனை. "பாஸ்" என்ற அந்தப் பூனைக்குப் பெயர். அந்த ஜீவன்தான் மல்லம்மாவிடம் கால்களில் வந்து முதுகை உயர்த்தி உராய்ந்து "மியாவ்.... மியாவ்...." எனக் குரல் கொடுத்து அவளுக்கும் அந்த குடும்பத்துக்கான முதல் உறவை ஏற்படுத்தித் தருகிறது. ஆனாலும் கணவன் மனைவிக்குள் தாம்பத்ய பந்தம் ஏற்படவில்லை. கி.ரா. இது குறித்து எழுதுகிறார்.

"இவர்களுடைய சமூக முறைப்படி கல்யாணம் முடிந்தவுடன் ஒரு நாள் பார்த்து முதலிரவு என்ற ஏற்பாட்டைப் பெரியவர்கள் செய்வது இல்லை. இங்குள்ள பெரியவர்களிடம் அதைப் பற்றி கேட்டால் "சை... அது என்னங்க அசிங்கம் பசுமாட்டைக் கொண்டு வந்து நிறுத்தி காளையை அவுத்து விடுகிற மாதிரி நம்பள்ளாம் மனுஷனில்லையா" என்ற கேட்பார்கள். கனிந்தவுடன் மணமக்கள் தாங்களாகவே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டியது தான். தம்பதியர் கனியும் சந்தர்ப்பத்தை நோக்கித்தான் கதையை நகர்த்திக் கொண்டு செல்கிறார். கி.ரா.சுசு வாசகன் ஒவ்வொருவனும் தன்னைக் கொண்டையாவாகவும் மல்லம்மாவாகவும் பாவித்துக்கொடு ஆவலாகக் கதையை வாசிக்க கதை அடுத்தடுத்த சம்பவங்களுடன் நகர்ந்து செல்கிறது.

"கொண்டையா குளிக்கிறான். வெந்நீர் எடுத்து வைத்த மல்லம்மா. அந்தக் குடும்ப வழக்கப்படி கணவனின் முதுகைத் தேய்த்துவிட வேண்டும். ஆனால் அவளுக்கேயான நாணமும்

தயக்கமும் அதைச் செய்யவிடாமல் தடுக்கிறது. முகூர்த்தத்தின் போது அவளுடைய கரத்தைப் பற்றிய முரட்டுக் கரத்தை நினைத்துப் பார்க்கிறாள். கூச்சமாகிறது. நீண்ட தயக்கத்துக்குப் பிறகு காது மடல்களில் ஜிவ்வென்று சூடான ரத்தம் பரவ. நாணத்தோடு அவனுடைய பரந்த முதுகைத் தொட்டு அழுக்குத் தேய்க்கிறாள். ''21 ஆம் நூற்றாண்டுக் கணவன் மனைவிக்கிடையில் இந்த மாதிரி அன்யோன்யம் இருப்பதாகத் தெரியவில்லை. எந்த மனைவியும் கணவனுக்கு முகுகு தேய்த்துவிடுவதில்லை. அவசர வாழ்க்கை முறையில் குளிப்பு என்பது சம்பிரதாயம் ஆகிவிட்டிருக்கிறது.

ஒரு அதிகாலை நேரத்தில் மல்லம்மா இடுப்பு உயரமடாவில் ஆளுயுயரமத்தினால் தயிரைக் கடைகிறாள். அப்போது அவளுடைய இடுப்பை கொண்டையா பார்க்கிறான். மத்தியிலிருந்து வழியும் வெண்ணை உருண்டைகளைக் கை நீட்டிக் கொண்டிருக்கும். அந்த வீட்டுக் குழந்தைகளுக்கு வரிசையாக தந்து கொண்டே வருகிறாள் மல்லம்மா. அப்போது கனமான கொண்டையாவின் கையும் வெண்ணெய்க்கு கை நீள்கிறது. ஆனால் பாவம் வெண்ணெய்க்குப் பதிலாக ''கிள்ளு'' தான் கிடைக்கிறது.

சேடா கடிக்கு மிளகு, அரப்பு எடுத்துக் கொடுத்து மெல்ல வைத்து மிளகின் காரம். அரப்பின் கசப்பு தெரிகிறதா எனப் பரிசோதித்த வைத்தியர் புகையிலைச் செடியின் இலையை அரைத்துப் பூசி வேப்பங்குழையை அடித்து ஒரு சிறிய உருண்டை மை கொடுத்துச் சாப்பிட வைத்தவர். மல்லம்மா உப்பில்லாப் பத்தியமும் கொண்டையா அகப்பத்தியமும் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறார். உப்பில்லா பத்தியம் சரி அது என்ன அகப்பத்தியம்? தம்பதியருக்குள் இருபது நாட்கள் தாம்பத்திய உறவு கூடாதென்பதுதான் அது. எனவே மல்லம்மாவை அவளுடைய தகப்பன் வந்து பிறந்த வீட்டுக்கு அழைத்துச் செல்கிறார்.

பிறந்த வீட்டிலிருந்து திருமணம் முடிந்து புகுந்த வீட்டுக்குச் மல்லம்மாவை எப்படிப் பிறந்த வீட்டின் நினைவுகள் அலைக் கழித்தனவோ அதேபோல விஷக்கடி காரணமாக வைத்தியர் விதித்த இருபது நாள் பத்தியத்துக்காக புகுந்தவீடு வந்தவளுக்கு கணவனின் நினைவுகள் உறக்கத்தைக் கெடுக்கின்றன. ஏங்குகிறாள். எவருமறியாமல் மௌனமாகக் கண்ணீர் வடிக்கிறாள். ஒவ்வொரு நாளும் அவளுக்கு ஒரு யுகம் போல கழிகிறது. ஒருநாள் மனைவியின் நினைவுகளால் உந்தப்பட்ட கொண்டையா அவளைத் தேடிச் செல்கிறான். அவள் எதிர்பார்த்தபடியே கொண்டையா திடீரென்று வருகிறான். அப்போது தான் அவள் குளித்துத் தலையாற்றிக் கொண்டிருந்தாள். கறுப்பு அருவி தலையிலிருந்து பொங்கி வழிவது பொல ரோமக்கற்றைகள் உடம்பை உராய்ந்து தரையை நோக்கி சென்று கொண்டிருந்தன. கண்டதும் எழுந்து நின்று இரு கைகளையும் அவளை நோக்கி நீட்டத் தான் முடிந்தது. கண்கள் பளபளத்தன. பேச முடியாமல் உதடுகளில் மட்டும் ஒரு துடிப்பு ''மல்லம்மா... மல்லம்மா'' என்ற வாய் நிறைய அழைத்துக் கொண்டே ஓடிவந்து அவன் அவளைக் கட்டிக்கொண்டான். வாழ்க்கையில் இப்படியான கணங்கள் ஒப்பற்றவை உயிரோடு உயிர் ஒட்டும் நேரம் மிகவும் கொஞ்சம்.

விஷக்கடியின் பெயரால் வைத்தியர் விதித்த கட்டுப்பாடுகளுக்குப் பிறகு தம்பதியருக்கு இடையில் ஆடி மாதம் வேறு குறுக்கிடுகிறது. ''ஆடி மாதம் தனது இரண்டு கைகளையும் ஒன்ற சேர்த்து அவர்களுக்குகிடைய புகுத்தி அகலப்படுத்தி அவளை அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் தள்ளிவிட்டது. அந்தச் சிறுசுகள் திரும்பவும் நாட்களை எண்ண ஆரம்பித்தார்கள்...'' என்று குறிப்பிடும் கி.ரா. கதையின் இறுதிக்கு வாசகர்களை அழைத்து வந்துவிடுகிறார்.

ஆவணி மாதம் மழை பெய்து தேன் கூட்டைப் போல கரிசல் காடு சுறுசுறுப்படைய ஆரம்பித்ததும் மல்லம்மாவின் தகப்பன்

பலகாரப் பெட்டிகளுடன் காடி வண்டியில் கொண்டு வந்து மகளை இறக்கி விடுகிறார். விளைந்த மக்காச்சோளக் கதிரின் மணிகளைப் போல நிறைந்த சிரிப்புடன் பற்களைக் காட்டிக் கொண்டையாவைப் பார்த்து பரவசத்துடன் சிரிக்கிறாள் மல்லம்மா. முள்ளும் கல்லும் மண்டிக்கிடந்த பத்து குறுக்கம் புஞ்சை நிலத்தை மல்லம்மாவைத் தவிர குடும்பமே சேர்ந்து சுத்தம் செய்து கொண்டிருந்தது. எல்லோரும் வேலையில் ஈடுபட்டிருந்த போது கொண்டையா தன் தகப்பனிடம் ஏதோ சாக்கப்போக்கு காட்டிவிட்டு வீட்டுக்கு வந்து விடுகிறான். மல்லம்மா சோறு வடித்துக் கொண்டிருந்தாள். அருகில் சென்று அவளது சாடியைக் கைகளால் தாங்கி முகத்தை நிமிர்த்தினான். வியர்த்த முகம். சோற்றை அப்படியே விட்டுவிட்டு எழுந்தவள் அவனை அப்படியே கட்டிக்கொண்டு முதன் முதலில் ஒரு "உப்பு முத்தம்" கொடுக்கிறாள். கொண்டையா தம்பதியின் "முதல் பகல்" இப்படியாகத்தான் ஆரம்பித்தது என்று கதையை முடிக்கிறார். இப்படி, இந்த "கோபல்லபுரம் கிராமம்" என்ற கதையில், மானமுள்ள விவசாயிகளின் வாழ்க்கையை, வீரத்தை, அவர்கள் வாழ்க்கைப் போராட்டத்தை பஞ்சத்தை, பசியை, பட்டினியை எல்லாவற்றையும் விவரித்து இருக்கின்றார் கி.ரா. மருதநிலப் பெயர்களான ஊரன், மகிழ்நன், கொண்கன் போன்ற பெயர்களுக்குப் பொருத்தப்பாடான மனிதர்கள் இந்நாவலில் வருகின்றனர். காவலாளியாக ஊர்க்குடும்பன், வாழ்க்கையின் அபத்தத்தை கேலிக்கையாக (மகிழ்நன்) மாற்றும் அக்கையா. நிலத்திற்கு உரிமையுடைய கோவிந்தப்பா (கொண்கள்) முதலியவர்கள் மருதநிலதிற்கே உரியவர்களாக இருக்கின்றனர். ஆனால் கிராமத்து வாழ்க்கையின் ஒட்டு மொத்தச் சாரத்தைக் கிரகித்துக் கொண்டு அதை கலையாக மாற்றும் நுட்பமறிந்த கி.ரா. இந்தச் சாதாரணமான கருவை அங்குலம் அங்குலமாக விரித்து - நிலம். விவசாயம், பருவநிலை, மானுட உழைப்பு, இயற்கை, மருத்துவம், உறவுகள், காதல் பிரிவு எனப் பன்முகத் தன்மையை அளித்து உயிர்த்துடிப்புடன் சித்திரமாக்கியுள்ளார்.

முடிவுரை

"இலக்கியம் என்பது ஒரு குறிப்பிட்ட மக்கட் கூட்டத்தினருடைய மனிதர்களின் வெளிப்பாடுமட்டுமல்ல அது ஒரு கால கட்ட உணர்ச்சிகளின் வெளிப்பாடுங்கூட" என்பதற்கிணங்க பெண் கதாபாத்திரங்களை அவர்களின் குணங்களை மனநிலைதனை வலிகளோடு ரசித்து வருத்தங்களையும் சமூக அவலங்களையும் கதை மாந்தருக்குள் தான் சென்று தானே கதை மாந்தராகி சமூகத்திற்கு வெவ்வேறு தரப்பில் வெளிப்படையாக இலைமறைகாயாக சமூக கேடுகளையும் சாதியக் கொடுமைகளையும் பெண்ணிகளின் வழிகளையும் தத்துருவமாக கதைமாந்தர் வழியாக சலவை செய்து வெளிச்சம் போட்டு காட்டியிருக்கிறார் கி.ரா.

துணைநூற்பட்டியல்

1. டாக்டர்.மு.பொன்னுசாமி, சங்க இலக்கியத்தில் காதல் மெய்ப்பாடுகள், முதற் பதிப்பு, கோவை, 1990.
2. டாக்டர்.கே.கே.பிள்ளை, தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2000.
3. மலேசியத் தமிழ் நாவல் கருத்தரங்க மலர், உமாபதிப்பகம் பெளியீடு, கோலாலும்பூர், முதல் பதிப்பு, 1992.
4. பி. எழிலரசி, தமிழ் நாவல்களில் பெண் சித்தரிப்பு, தி பார்க்கர் முதல் பதிப்பு, 2005.
5. ராஜம் கிருஷ்ணன், காலந்தோறும் பெண் (சமுகவியல் ஆய்வு), தாகம் பதிப்பகம், 1989.